தலைப்பு 273 - புத்தளம் மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 273 – புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே மாதம் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே மாதம் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை புத்தளம் மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 திசெம்பர் 23 ஆம் திகதியிடப்பட்ட, SA/GFS/01/01/08 - Volume இலக்கத்தைக் கொண்ட அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி, மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் கணக்கில்	இந்தக் கட்டிடங்களில் சில வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்றும், மேலும் சில கட்டிடங்கள் தற்போது பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் அறியப்படுகிறது.	சுற்றறிக்கையின்படி நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை துரித வேலைத்திட்டம் ஒன்றைப் பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டு மதிப்பிடு

	பதியப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், கிராம அலுவலர் அலுவலகங்கள் உள்ளிட்ட 81 கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கில் பதியப்படவில்லை.		செய்து கணக்கில் பதியப்படுதல் வேண்டும்.
(ஆ)	மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான, 17,317 சதுர அடி பரப்பளவைக் கொண்ட, நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத 14 அரச உத்தியோகத்தர் குடியிருப்புகள் மதிப்பிடப்பட்டு கணக்கில் பதியப்படவில்லை.	உடனடியாக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி, மதிப்பிட்டுக் கணக்கில் பதிய நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின்படி நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை துரித வேலைத்திட்டம் ஒன்றைப் பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டு மதிப்பிடு செய்து கணக்கில் பதியப்படுதல் வேண்டும்.
(இ)	அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவினால் 9 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 38 சொத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு, அவற்றை கணக்கில் பதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	கருத்து தெரிவிக்கப்படவில்லை	சுற்றறிக்கையின்படி நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை துரித வேலைத்திட்டம் ஒன்றைப் பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டு மதிப்பிடு செய்து கணக்கில் பதியப்படுதல் வேண்டும்.
(ஈ)	நிதிச் செயல்திறன் அறிக்கையில் மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தும் செலவினம், காசுப்பாய்ச்சல் அறிக்கையில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் பௌதீகச் சொத்துக்களைக் கட்டுதல் அல்லது கொள்வனவு செய்வதற்கான செலவினம் மற்றும் நிதிநிலைமை அறிக்கையில் உள்ள காணி, கட்டடம் மற்றும் உபகரணங்களின் ஆண்டுக்கான மொத்தச் சேர்க்கை பெறுமதி ஆகிய மூன்று பெறுமானங்களும் ஒன்றோடு ஒன்று சமமாக இருக்க வேண்டிய போதிலும், அவை முறையே ரூபா. 71,714,715, ரூபா. 99,811,496 மற்றும் ரூபா. 79,142,604 என வெவ்வேறு பெறுமதிகளாக இருந்தன.	நிதிச் செயல்திறன் அறிக்கையில் மூலதனச் சொத்துக்களைப் கையகப்படுத்தல் என்பதன் கீழ் காட்டப்படும் தொகையானது, குறித்த ஆண்டின் செலவு விடய தலைப்பு இலக்கங்கள் **2102**, **2103** மற்றும் **2104** இன் கீழ் உள்ள செலவுகளாகும். மேலும், நிதிநிலைமை அறிக்கையில் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அதிகரித்தலின் கீழ் உரிய ஆண்டில் மதிப்பிடப்பட்ட தொகையும் அடங்குகின்றது. காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆண்டுக்கு ஏற்புடையதான அனைத்து மூலதன செலவினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.	முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு சரியான மிகுதிப் பணத்தை கணக்குகளில் சீராக்கப்படுதல் வேண்டும்.

(உ)	நிதிநிலை அறிக்கைகளில் ACA 6 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடப்பல்லாச் சொத்துக்கள் தொடர்பான மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் சனவரி 01 ஆம் திகதியிட்ட ஆரம்ப மிகுதிப்பணம் மற்றும் திறைசேரி கணினியில் அச்சிடப்பட்ட மிகுதிப்பணங்களுக்கு இடையில் ரூபா. 10,231,924 வேறுபாடு காணப்பட்டது.	ACA 6 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிகுதிப்பணம், திறைசேரியால் பதிவேற்றப்பட்ட கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையாகும். அத்துடன், எங்களால் தயாரிக்கப்பட்ட SIGAS நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய மிகுதிப்பணம் வேறுபாடு அற்றதாகும்.	நிதிநிலை அறிக்கை-களில் உள்ள மிகுதிப்பணங்களுக்கும் திறைசேரி கணினியில் அச்சிடப்பட்ட மிகுதிப்-பணங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை ஒப்பிட்டு, சரியான பெறுமதியை கணக்-குகளில் காட்டப்படுதல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இவ்வறிக்கையில் குறிப்பிடப்படும் 1.6.1 (i), 1.6.1 (ii), 1.6.1 (iii), 3.2 (ii) 4.9 (இ), 4.3 மற்றும் 4.9 (அ) ஆகிய பந்திகளுக்கு ஏற்புடையதான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (பொருத்தமாயின் மாத்திரம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றளிக்க வேண்டும். அத்துடன், அந்த முறைமையின் வினைத்திறன் குறித்து அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கேற்ப முறைமையை வினைத்திறனுடன் கொண்டு செல்லத் தேவையான	மாவட்ட முகாமைத்துவக் குழுவினால் குறித்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் மாதாந்தம் மீளாய்வு செய்யப்படுவதுடன், எதிர்காலத்தில் அதன் பிரதி ஒன்று கணக்காய்விடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், இந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு, அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட-மைக்கான அறிக்கைகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட-வில்லை.		
(ii)	கணக்காய்வாளர் அதிபதியினால் தேவைப்படும் வகையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் பதில்கள் வழங்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியிரு-த்தல் வேண்டும். இருப்பினும், அறிக்கையின் 4.8 ஆவது பந்தியின்படி, 11 கணக்காய்வ வினாக்களுக்குப் பதில்கள் வழங்கப்படவில்லை.	ஏனைய பிரிவுகள் மூலமாகவும் பிரதேச செயலகங்கள் மூலமாகவும் தகவல்களைப் பெற்று, பதில்களை மீளத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பான ஆரம்ப நடவடிக்-கைகளுக்கு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டதனால் இந்தக் குறைபாடு மேலும் அதிகரித்தது என்றும் அறியப்படுகிறது	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

	அவதானிப்புக்கள்			
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை	கணக்களிப்பு அதிகாரியின் கருத்துகள்	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணத்தில் நி.பி128 (1) (உ)	9 பிரதேச செயலகங்க-ளுக்குச் சொந்தமான, பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் இருந்த 37 அரச உத்தியோகத்தர் குடியிருப்புகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று, அவற்றைப் பழுதுபார்த்து, அந்தச் சொத்துக்களைப் பாதுகாக்கவும் பேணவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் கிடைத்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து அரச உத்தியோகத்தர் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், கோரிக்கைகள் பெறப்பட்டதன் பின்னர் பழுதுபார்ப்பு வேலை-களைச் செய்வதற்கு பொருத்தமான செயல்முறை ஒன்று தயாரிக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.	நிதி பிரமணாம் பிரகாரம் சொத்துக்களின் பாதுகாப்பிற்காக பழுதுபார்ப்பு வேலைகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ)	2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதியிடப்பட்ட, 18/2001 இலக்கத்தைக் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை	நாடு தழுவிய சேவைகளுக்கு உரிய உத்தியோகத்தர்கள் மற்றும் நாடு தழுவிய சேவைகளுக்கு உரிய-தல்லாத உத்தியோக-த்தர்கள் தொடர்பில், 05 வருடங்கள் நிறைவில் ஏனைய உத்தியோகத்த-ர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும் வகையில் இடமாற்றத்திற்கான பொதுவான பொதுக் கொள்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படு-தல் வேண்டும். இருப்பினும், புத்தளம் மாவட்டச் செயலகம் மற்றும் 10 பிரதேச செயலகங்களில் உள்ள 338 உத்தியோக-த்தர்களுக்கு மேற்-குறிப்பிட்ட நடைமுறை பின்பற்றப்படவில்லை.	உள்ளக இடமாற்றங்க ளும் மேற்கொள்ள-ப்பட்டுள்ளன. வருடாந்த இடமாற்றங்க ளுக்காகவும் விண்ணப்பி-க்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் பதிலாள-ருடன் இடமாற்றங்களை ளச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி இடமாற்ற நடைமுறையைச் செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

3.3 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 இலக்க அரச நிதிக் சுற்றறிக்கையினால் திருத்தம் செய்யப்பட்ட நிதி பிரமாணம் 371(5) இன் ஏற்பாடுகளின்படி, ஒரு இடைக்கால முற்பணம் வழங்கப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட பணி நிறைவடைந்து 10 நாட்களுக்குள் அந்த இடைக்கால முற்பணம் மீண்டும் தீர்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மாவட்டச் செயலகம், புத்தளம், கருவலகஸ்வெவ, மஹகும்புக்கடவல மற்றும் வனாதவில்லுவ பிரதேச செயலகங்கள் தொடர்பான 24 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா. 1,318,162 பெறுமதியான இடைக்கால முற்பணங்கள் 05 நாட்கள் முதல் 93 நாட்கள் வரையிலான கால தாமதத்துடன் தீர்வு செய்யப்பட்டுள்ளன.	முற்பணங்களைத் தீர்வு செய்தல் உத்தியோகத்தர்களினால் ஏற்பட்ட குறைபாடாகும். எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் இன்றிச் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.	சட்டரீதியான ஏற்பாடு-களுக்கு முரணாகச் செயற்பட்ட உத்தியோ-கத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் இந்த நிலையைத் தடுப்பதற்காக ஓர் உள்ளக வேலைத்-திட்டத்தை உருவாக்குதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	புத்தளம் பிரதேச செயலகத்தில், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பாதுகாப்பான நிலையங்களை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் ரூபா. 1,367,059 செலவில் அமைக்கப்பட்ட மலசலக்கூடத் தொகுதியானது, உரிய தரத்திற்கு நிர்மாணிக்கப்படாததன் காரணமாகப் பாவனைக்கு உட்படாமல் செயலற்றுக் காணப்படுகிறது.	மனதீவ் (Manathiv) கிளினிக் நிலையத்தில் அமைக்கப்பட்ட மலசலக்கூடத் தொகுதியானது அனர்த்தங்களின் போது பயன்பாட்டிற்காகவே நிர்மாணிக்கப்பட்டது என்றும், மாதாந்த கிளினிக்குகள் நடைபெறும் போது அதில் அமைக்கப்பட்டுள்ள மலசலக்கூடத் தொகுதியானது கர்ப்பிணித் தாய்மார்களின் பயன்பாட்டிற்காக உபயோகிக்கப்படுகிறது என்றும் அறியப்படுகிறது.	சரியான தரத்திற்கு பொருத்தமான வகையில் வேலை-களை மேற்கொண்டு, பாவனைக்காக தயார்ப்படுத்தல் வேண்டும்.
(ஆ)	முந்தளம் பிரதேச செயலகத்தினால், 2024 ஆம் ஆண்டின் பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ரூபா. 31,127,703 செலவில் பூர்த்தி செய்யப்பட்ட 112 அபிவிருத்தித் திட்டங்களில், ரூபா. 2,168,322 பெறுமதியான 25 திட்டங்கள் பிளாஸ்டிக் கதிரைகள் விநியோகிக்கும் திட்டங்களாக இருந்தன. மேலும், தேசிய உற்பத்திக்கு நேரடிப் பங்களிப்பை வழங்கும் திட்டங்களை அடையாளம் காண்பதில் முழுமையான கவனம் செலுத்தப்படவில்லை.	2024 ஆம் ஆண்டுக்கான பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட வேலைத்திட்டமானது, நிதி அமைச்சின் MF/02/2023 இலக்கச் சுற்றறிக்கையின் 1.5 மற்றும் 1.10 ஆவது பந்திகளுக்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும், 2025 ஆம் ஆண்டின் நிதி அமைச்சின் MF/02/2025 இலக்கச் சுற்றறிக்கையின் மூலம் உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தை அடைவத-ற்கான முன்மொழியப்பட்ட பிரதான துறைகளின் கீழ் செயற்படக் குறிப்பிடப்பட்டுள்ள-தனால், எதிர்காலத்தில் சுற்றுச்-சூழலில் பெருமளவு பிளாஸ்டிக் சேரும் அபாயத்திலிருந்து விடுபட்டு செயலாற்ற முடியும்.	முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு, கருத்திட்டங்களை அடையாளம் காணும் நடைமுறைக்கு இணங்காத வகையில் திட்டங்களை அடையாளம் காணப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அத்துடன், எதிர்காலத்தில் உரிய சுற்றறிக்கைகள் மற்றும் ஏற்பாடுக-ளுக்கு அமைய தேசிய உற்பத்திக்குப் பங்களிக்கும் திட்டங்-களை அடையாளம் காணவும் நடவடிக்-கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நவகத்தேகம பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும்போது, மின்சாரத் தொகுதிக்கு ரூபா 1.898 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், அதனை உரியவாறு அமைக்காததன் காரணமாக தொடர்ச்சியான மின் தடங்கல்கள் (மின்சார வெட்டுக்கள்) ஏற்பட்டிருந்தன.	மழைக் காலங்களில் கூரையில் ஏற்படும் நீர் கசிவின் காரணமாக மின்சாரம் தடைபடுவதாகவும், அதைப் பழுதுபார்ப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ள-தாகவும், 2025 ஆம் ஆண்டில் அதற்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.	மின்சாரம் தடைபடுவ-தற்குரிய காரணத்தைக் கண்டறிந்து, தாமத-மின்றித் தீர்வுகளை மேற்கொள்வதற்கு ஒரு வேலைத்-திட்டத்தைச் செயற்-படுத்தல் வேண்டும்.
(ஆ)	நவகத்தேகம பிரதேச செயலகக் கட்டிடத்தில் சுகாதார தொகுதிக்காக முதலாம் கட்டத்திற்கு ரூபா. 645,780 மற்றும் இரண்டாம் கட்டத்திற்கு ரூபா. 679,671 ஆக மொத்தம் ரூபா. 1.325 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், சுகாதாரத் தொகுதியானது அசுத்தமான நிலையில் காணப்படுவதுடன், அத்தொகுதியில் உள்ள சில உபகரணங்கள் செயலிழந்து போயுள்ளன. மேலும், அலுவலக உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் செய்வதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.	இப்பிரதேசத்தில் உள்ள நீரின் உவர்ப்புத் தன்மை (Salinity) காரணமாக கல்சியம் படிவடைந்து மலசலக்கூடத் தொகுதி தொடர்ந்து அடைப்புக்குள்ளா-கிறது. நீர்க் குழாய் தொகுதியில் உள்ள அடைப்புகளை நீக்கி, அந்தக் குழாய் தொகுதியைப் பழுதுபார்ப்பதற்கு 2025 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறியப்படுகிறது.	இப்பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, உரிய பழுதுபார்ப்பு வேலைகளை உடனடி-யாக மேற்கொள்வ-தற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூபா. 2,510,170 செலவில் புத்தளம் பிரதேச செயலகத்தினால் மார்ட்டின் பௌம வீதி (Martin Bouma Road) அபிவிருத்தி செய்யப்படினும், 02 இற்கு குறைவான குடும்பங்களே அந்த வீதியைப் பயன்படுத்தியிருந்தன.	இந்தப் பாதையை அபிவிருத்தி செய்வதற்குப் பிரதேச கிராமியக் குழுவினால் தெரிவு செய்யப்ப-ட்டது என்றும், இப்பாதையை அப்பிரதேசவாசிகள் குறுக்கு வீதியாகப் பயன்படுத்துவதனால் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், எதிர்காலத்தில் வீதிகளைத் தெரிவு செய்யும் போது நேரடிப் பயனாளிகள் அதிகமுள்ள வீதிகளுக்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.	எதிர்காலத்தில் திட்டங்களைத் தெரிவு செய்யும்போது உரிய அளவுகோல்களின் அடிப்படையில் திட்டங்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

4.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாதம்பே பிரதேச செயலகத்தினால், 2019 ஆம் ஆண்டின் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா. 8,584,815 செலவில் மேற்கொள்ளப்பட்ட 09 நீர்த் திட்டங்களும், 2022 ஆம் ஆண்டின் "கம சமக பிளிசந்தர" வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா. 3,357,861 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 06 அரச கட்டிடங்களும் நிறைவு செய்வதற்கு நிதி வசதிகள் கிடைக்காத காரணத்தினால் கைவிடப்பட்டிருந்தன.	2019 ஆம் ஆண்டில் "கம்பேரலிய" வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 09 நீர்த் திட்டங்கள் தொடர்பாக தற்போது புத்தளம் மாவட்ட சமூக நீர் வழங்கல் பிரிவினால் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், செயலற்றுக் காணப்படும் 06 கட்டிடங்களுக்காக மாற்று வழிகள் மூலமாகவோ நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொண்டோ மேலதிக பணிகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அறியப்படுகிறது.	சம்பந்தப்பட்ட திட்டங்களை நிறைவு செய்வதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்

4.4 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திறைசேரி செயலாளரின் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 இலக்க அரச நிதிக் சுற்றறிக்கையின் 04 ஆவது பந்தியின்படி, வருடாந்த கொள்வனவுத் திட்டம் அமுலிலுள்ள ஆண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, அதற்குப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்திற்குப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன், கணக்கீட்டு உத்தியோகத்தரினால் 43 நாட்கள் தாமதமாகவே அது அங்கீகரிக்கப்பட்டிருந்தது.	வருடாந்த கொள்வனவு நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு, கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்வருடம் முதல் புதிய கொள்வனவு வழிகாட்டல் கோவைக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	குறித்த ஏற்பாடுகளின்படி கொள்வனவு திட்டத்தை அங்கீகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2, 4.2.3 ஆகிய பிரிவுகளின்படியும், 2024 ஆம் ஆண்டில் தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையற்ற சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.1.5 ஆவது பிரிவின்படியும், கொள்வனவுச் செயற்பாடு ஆரம்பித்ததிலிருந்து ஒப்பந்தம் வழங்குவது வரையான ஒவ்வொரு கொள்வனவு பணிகளையும் காலவரையின்படி விவரிக்கும் வகையில் கொள்வனவு அட்டவணை (Procurement Time Schedule - PTS) ஒன்றைத் தயாரித்து, அதனைத் தொடர்ச்சியாக இற்றைப்படுத்துதல் பெறுகைக்கான அலகின் (Procurement Entity) பொறுப்பாக இருந்தபோதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	தேசிய கேள்வி கோரல்களுக்கு அமைவாக கொள்வனவு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுச் செயன்முறைகளுக்காக கொள்வனவு அட்டவணைகள் தயாரிக்கப்படவில்லை.	பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	ரூபா. 25,732,960 செலவில் 99 மேசைக்கணினிகளும் (Desktop) மடிக்கணினிகளும் (Laptop) 3 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தின்படி 21 கணினிகளுக்கு மாத்திரமே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. முறையாகத் தேவைகளை அடையாளம் கண்டு, ஒரே தடவையில் கொள்வனவுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பெறுகை திட்டத்தில் குறிப்பிடப்பட்டபடி முதல் கணினிக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. ஆனால், ஆண்டு மத்தியில் நிதி ஒதுக்கீடுகள் பல சந்தர்ப்பங்களில் கிடைத்ததன் காரணமாகவும், தேவைகள் பல சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாகவும் கணினிகளை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்கு முடியவில்லை.	தேவையை முற்கூட்டியே தீர்மானித்து, அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று, முறையான திட்டம் ஒன்றின் கீழ் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ஈ)	2019 திசெம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட 08/2019 இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி, மாவட்டச் செயலகமானது 2020 சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்தின் இலத்திரனியல் பெறுகைகள் (e-GP) முறைமையில் பெறுகைகள் பிரிவாக (Procurement Entity) ஆக பதிவு செய்து, சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்படி	2025 ஆம் ஆண்டு முதல், புதிய பெறுகைகள் வழிகாட்டலின்படி பெறுகைகள் அலகொன்றை (Procurement Management Unit - PMD) நிறுவி, இலத்திரனியல் கொள்வனவு முறைமையில் (e-GP) பெறுகைகள் பிரிவைப் பதிவு செய்து, அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், அரசாங்கத்தின் இலத்திரனியல் பெறுகைக்கு (e-GP) அமையச் செயற்படுதலை

	வெளிப்படைத்தன்மையுடன் கொள்வன-வுகளை மேற்கொள்ள வேண்டும். இருப்பினும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின்போது 05 வருடங்கள் கடந்தும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட-வில்லை.		உடனடியாக மேற்-கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	புத்தளம் மாவட்டச் செயலகத்திலும் அதன் வெளிப்புற வளாகத்தி-லும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 3.25 மில்லியன் செலவில் நிறுவப்பட்ட 54 கமெராக்களைக் (Cameras) கொண்ட CCTV தொகுதியானது, உரிய தொழில்நுட்ப வழிமுறைகள் மற்றும் காலப்பகுதிக்குரிய இற்றைப்படுத்தல்கள் முறையாக மேற்கொள்-ளப்படாததன் காரண-மாக 05 வருடங்களாக செயலிழந்து காணப்படுவதுடன், உபகரணங்கள் அழிவடைந்து வந்தன.	CCTV தொகுதியைப் பழுதுபார்ப்பதற்காக அவ்வப்போது விலை-மனுக் கோரப்பட்ட போதிலும், அதற்காகப் பெருந்தொகையான பணம் மதிப்பிடப்பட்ட-தாலும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் உத்தர-வாதக் காலத்தை வழங்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டதாலும் அது மேற்கொள்ளப்பட-வில்லை. இருப்பினும், எதிர்காலத்தில் இது தொடர்பாக கலந்துரை-யாடி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	முறையான ஆய்வை மேற்கொண்டு, சிக்கனம், வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பவற்றின் மீது கவனம் செலுத்தி, CCTV தொகுதி தொடர்பாக விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

4.6 நட்டங்களும் சேதங்களும்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதியியல் கூற்றின் இணைப்பு (II) புத்தகங்களில் இருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றின்படி, மாவட்டச் செயலகத்தின் 03 வாகனங்களில் 01 வருடத்திற்கும் 19 வருடங்க-ளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ரூபா. 1,411,204 பெறுமதியான சேதங்களுடன் விபத்துக்கள் ஏற்பட்டிருந்தன. இருப்பினும், குறித்த சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பில் நிதி பிரமாணக்குறிப்பு பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	2006 ஒக்டோபர் 14 ஆம் திகதி நடந்த விபத்து தொடர்பில் ரூபா. 305,804 தொகையை புத்தகத்திலிருந்து பதிவழிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், 2007 ஆகஸ்ட் 27 ஆம் திகதி நடந்த வாகன விபத்து தொடர்பான தகவலைக் கண்டறிவது கடினம் என்றும், 2013 யூலை 05 ஆம் திகதி நடந்த விபத்து தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ள-தோடு, சாரதியிடமிருந்து ரூபா. 5,521.51 தொகையை தவணைகளாக	சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பாக நிதி பிரமாணம் படி உடனடியாக நடவடி-க்கை எடுக்கப்படுதல் வேண்டும். அத்துடன், நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான விசாரணைகளை தாமதப்படுத்திய சம்பந்தப்பட்ட உத்தி-யோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்-கும், தற்போதுள்ள சேதங்கள் மற்றும் நட்டங்கள்

		அறவிட்டு வருவதாகவும், 2021 பெப்ரவரி 11 ஆம் திகதி நடந்த வாகன விபத்து மற்றும் 252-9871 வாகன விபத்து ஆகியன தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.	தொடர்பான மேலதிக பணிகளை விரைவாக நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	வனாதவில்லுவ பிரதேச செயலகத்தின் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டின்படி 25 எரிபொருள் பற்றுச்சீட்டுகள் (Fuel Bills) காணாமல் போயிருந்தன. அது தொடர்பான பெறுமதியைத் தீர்மானிக்க முடியாத காரணத்தினால், அதற்காக நிதி பிரமாணக் குறிப்பு 104 இன் படி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அது அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.	2024 திசெம்பர் 19 ஆம் திகதி பொலிஸ் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகவும், அத்துடன் புத்தளம் மற்றும் வனாதவில்லுவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு (Multi-purpose Co-operative Society) அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தற்போது நிதி பிரமாணம் 104(4) இன் கீழ் ஓர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	நிதி பிரமாணம் 104 இன் படி விசாரணை நடவடிக்கைகளை விரைவாக நிறைவு செய்து, மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாதம்பே பிரதேச செயலகத்தின் இலக்கம் 02 கூட்ட மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா. 1,211,093 இற்கு ஒரு முதியோர் சங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, மதிப்பீட்டுத் தொகையையும் அதற்குரிய நிர்மாணப் பணிகளின் பௌதீகப் பரிசோதனையின்போதும் ரூபா. 32,464 மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது என்றும், அத்துடன் குறித்த விலை அளவீட்டின்படி (Bill of Quantities - BOQ) பூர்த்தி செய்யப்படாத பணிக்காக ரூபா. 15,662 செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவதானிக்கப்பட்டது.	150**x**75 மில்லிமீட்டர் அளவிலான பியூர்லைன் (Purline) இற்காக செலுத்தப்பட்ட பணத்தை அளவீடு செய்து, அதற்கான தொகையைத் திட்டத்தின் பிடிப்பு பணத்தைச் (Retention Money) செலுத்தும் போது அரசாங்கத்தின் வருமானத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அத்துடன் விடயம் இலக்கம் 17 இன் படி மேற்கொள்ளப்பட வேண்டிய கூரையின் உச்சியை (வென்டிலேட்டர்/Ventilator) அஸ்பெஸ்டோஸ் தகடுகளால் மூடி, நட் மற்றும் போல்ட் போட்டு பொருத்துவதை உரிய சங்கத்தின் மூலம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.	மதிப்பிடப்பட்ட பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்திய பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்துடன், மேலதிகமாகக் கொடுக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் விதிமுறைக்கு முரணான கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்கள் தொடர்பில் 2024 ஆம் நிதியாண்டுக்குரியதாக 2025 பெப்ரவரி 07 ஆம் திகதி முதல் ஏப்ரல் 25 ஆம் திகதி வரை 11 கணக்காய்வுக் கேள்விகள் விடுக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்தக் கேள்விகளுக்கான பதில்களை வழங்குவது 02 நாட்கள் முதல் 64 நாட்கள் வரையான காலப்பகுதியால் தாமதமடைந்திருந்தது.	ஏனைய பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகங்களிடமிருந்து தகவல்களைப் பெற்று பதில்களை மீண்டும் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியிருந்ததோடு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பணிகளுக்காக முற்கூட்டிய உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டதால் இந்த சிரமம் மேலும் அதிகரித்திருந்தது.	கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் நிதி பிரமணாக் குறிப்பின் 155 இற்கும் அமைய, கணக்கீட்டு உத்தியோகத்தர் (Accounting Officer) கணக்காய்வுக் கேள்விகளுக்கு உரிய காலத்தில் பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்காதது தொடர்பாக உரிய அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அத்துடன், கணக்காய்வுக் கேள்விகளுக்கான பதில்கள் வழங்குவதைத் துரிதப்படுத்தல் வேண்டும்.

4.9 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கிராம சக்தித் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களில் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களாக நிறுவப்பட்ட 173 சங்கங்களில் 149 சங்கங்களின் ரூபா. 98,115,769 நிதி எந்தப் பயனுக்கும் இன்றி செயலற்றுக் காணப்பட்டதுடன், குறித்த அரசாங்க நிதியினைச்	செயலிழந்த கிராம சக்திச் சங்கங்களிடம் உள்ள அரசாங்க நிதியங்கள் மற்றும் அதற்குரிய வட்டி தொடர்பில் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.	இந்த நிதியங்களை முறையான அனுமதியின் கீழ் செயற்திறன் மிக்க சங்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கோ மாவட்டச் செயலாளரின் பொது வைப்புக்கணக்கில் வரவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	செயற்திறன் மிக்க சங்கங்களுக்குப் பயன்படுத்துவத-ற்கோ மாவட்டச் செயலகத்தின் பொது வைப்பு நிதியில் வைப்பிலிடவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
((ஆ)	வனாதவில்லுவ பிரதேச செயலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு கெப் வண்டி மற்றும் ஒரு பவுசர் வண்டி (Bowser Vehicle) என்பன பல வருடங்களாக எந்தப் பயனுமின்றி சிதைவடைந்து காணப்பட்டன.	அந்த வாகனங்கள் ஓடுவதற்குப் பொருத்தமற்ற மட்டத்தில் காணப்படுவதனால், மாவட்டச் செயலகத்தின் பொறுப்பின் கீழ் எடுப்பதற்கும், பழுதுபார்க்க முடியாத வாகனங்கள் தொடர்பான தகவலின் கீழ் 2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.	செயலற்றுக் கிடந்து சிதைவுற்று வரும் இரண்டு வாகனங்கள் தொடர்பில் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	அரசாங்கத்தின் நெல் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் 2020/21 பெரும் போகத்திலும் 2021 சிறு போகத்திலும் நெல் கொள்வனவு செய்தமை தொடர்பில், 2025 மார்ச் 21 ஆம் திகதி நிலவரப்படி மாவட்டத்திலுள்ள 20 அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து 04 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா. 106,171,069 தொகையையும் அதற்குரிய சார்ப்பு நிதி வட்டியையும் (Contingent Financial Interest) கணக்கிட்டு, அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பணத்தை மீள அறவிடவோ பொருத்தமான சட்ட நடவடிக்கை எடுக்கவோ விரைவாகச் செயற்பட வேண்டியிருந்தபோதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் இதற்காக சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.	நெல் கொள்வனவுச் செயற்பாடு தொடர்பாக முறையான விசாரணையை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், அமைச்சரவைப் பத்திரத்திற்கமைய அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய நிதியினை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் அறவிடுவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	மாதம்பே கொங்கஸ்யாயக் குளத்தில் (பனிரெண்டாவ குளம்) ஒரு கொங்கிறீட் மதகைக் கட்டியமைப்பதற்கும், அதன் அணையினைப் புனரமைப்பதற்கும் 2019 ஆம் ஆண்டு “கம்பேரலிய“ துரித கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு	நிர்மாணப் பணிகளைக் கண்காணித்த மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அணைக்-கட்டிற்குச் சேதம் ஏற்படக்கூடும் என்பதால், காய்ந்து போயிருந்த புளியமரத்தின் கிளைப்	பயன்பாடுகளை அதிகப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும், தொழில்நுட்ப ஆலோசனையின் அடிப்படையில் குளத்தின் அணைக்கட்டின்

	விவசாய அமைப்புக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் குளத்தின் அணையினை மேம்படுத்துவதற்காக ரூபா. 330,610 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், அணைக்கட்டின் மீது காய்ந்து போயிருந்த புளியமரத்தின் வேர்களை அகற்றாமல் புனரமைப்பு செய்தமையால், மரத்தின் வேர்கள் சிதைவடையும்போது அணைக்குச் சேதம் ஏற்பட வாய்ப்பிருந்தது. மேலும், குளத்திலிருந்து நீரைப் பெறும் நெற்செய்கைக் காணியின் அளவு 03 ஏக்கர், 02 ரூட் ஆக இருந்ததுடன், பயனாளிகளின் எண்ணிக்கை தற்போது பயிர் செய்யும் 02 விவசாயிகள் மாத்திரமே என்பதும் அவதானிக்கப்பட்டது.	பகுதிகளைத் தவிர்த்து, அடிப்பகுதியுடன் கூடிய வேர் முறைமையை அகற்ற வேண்டாம் என்று வாய்மூல அறிவுறுத்தல்களை வழங்கியதாக விவசாய அமைப்பு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.	பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(உ)	2017 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட 262/2017 இலக்க அரச கணக்குகள் கட்டுப்பாட்டாளரின் சுற்றறிக்கையின்படி, மரணித்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், முந்தலம பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய ஒரு மரணித்த உத்தியோகத்தரின் ரூபா. 243,840 கடன் நிலுவையை 1 ½ வருடங்கள் கடந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	உத்தியோகத்தரின் மரண உபகாரச் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்காக ஓய்வூதிய அலுவலரிடம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.	சுற்றறிக்கையின் ஏற்பாடு-களின்படி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஊ)	2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டு விலகிய 02 உத்தியோகத்தர்க-ளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 189,300 தொகையானது 11 மற்றும் 18 வருடங்களுக்கும் மேலாகக் கடந்துவிட்ட போதிலும், 2024 மே 29 ஆம் திகதியிடப்பட்ட ீகுனு.்.சுநுனு.்.சுநுபு.்.ஊஜசு.்.2023/04 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின்படி தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டால் முழு கடன் தொகையையும் அறவிட கவனம் செலுத்தப்பட்டு-ள்ளதாகவும், மற்றைய உத்தியோகத்தர் மாவட்டச் செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதங்களைப் பொறுப்பேற்காத-தால், சட்ட நடவடிக்கை எடுப்பதில் சிரமம் இருப்பதாகவும் அறியப்படுகிறது.	முறையானதொரு விசாரணையை மேற்-கொண்டு, உரிய காலத்தில் கடன்களை அறவிட நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், அத்துடன் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி நிலுவைக் கடன்களைத் துரிதமாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

5. நல்லாளுகை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2019 சனவரி 12 ஆம் திகதியிடப்பட்ட DMA/01-2019 இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.3 உப பிரிவின்படி, ஆண்டுதோறும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை, அதாவது ஒரு வருடத்திற்கு 4 தடவைகள் நடத்தப்பட வேண்டியிருந்தபோதிலும், தலைப்பு இலக்கம் 273 கொண்ட மாவட்டச் செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களில், 10 பிரதேச செயலகங்களில் 03 குழுக் கூட்டங்களும், 04 பிரதேச செயலகங்களில் 02 குழுக் கூட்டங்களும், ஒரு பிரதேச செயலகத்தில் 01 கூட்டமும் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.	2024 ஆம் ஆண்டில் சனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றதன் காரணமாக, நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்த முடியாமல் போனதாகவும், 2025 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்து பிரதேச செயலக-ங்களிலும் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.	சம்பந்தப்பட்ட சுற்றறிக்-கையின் ஏற்பாடுகளுக்கு அமைய, நிர்ணயிக்க-ப்பட்ட கூட்டத் தடவைகளின் எண்ணிக்-கையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு-தல் வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களில், சிரேஷ்ட மட்டத்துடன் தொடர்புடைய 04 பதவிகளுக்கான 18 உத்தியோகத்தர்கள், மூன்றாம் நிலை மட்டத்துடன் தொடர்புடைய 03 பதவிகளுக்கான 11 உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டாம் நிலை மட்டத்துடன் தொடர்புடைய 07 பதவிகளுக்கான 230 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதோடு, இரண்டாம் நிலை மட்டத்திலான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்	பதவியணி வெற்றிடங்கள் தொடர்பாக மாதாந்தம் மற்றும் காலாண்டு ரீதியாக முகாமைத்துவ சேவைத் திணைக்களம் மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வருவதாகவும், 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பின்-போது 03 பிரதேச செயலாளர் பதவிகள், ஒரு உதவிப் பிரதேச செயலாளர் பதவி, 04 பிரதி/உதவி பணிப்பாளர் பதவிகள், 02	பதவியணி தேவை தொடர்பாக பகுப்பாய்வை மேற்கொண்டு, வெற்றிட-மாக உள்ள பதவிகளை நிரப்புவதற்கும், அத்துடன் அதிகப்படியான உத்தியோகத்தர்களை வெற்றிடங்கள் காணப்படும் இடங்களுக்குப் பணியம-ர்த்துவதற்கும் தேவை-யான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அளவை விட 75 பேர் அதிகமாக உள்ளனர் என்பதும் அவதானிக்கப்பட்டது.

நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 30 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன என்றும் அறியப்படுகிறது.